DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C.151/2023 |
| Deposition of Witness for | : | P.W. 1 |
| Name | : | **முத்துமீனாட்சி** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரி P.T.Warrant மூலம் காணொளியில் ஆஜர்படுத்தப்பட்டார்)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 23.02.2026

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது இராமநாதபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் சிவகங்கை தாலுகா வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது கடந்த 11.03.2022 ம் தேதி நான் மற்றும் நிலைய சார்பு ஆய்வாளர் முருகேசன், த.கா.1300 திரு. பாலமுரளி கிருஷ்ணன் மற்றும் காவலர் 1844 நாகராஜன் ஆகியோருடன் குற்ற தடுப்பு நடவடிக்கை சம்பந்தமாக கண்காணித்து வந்த போது பில்லூர் விலக்கு ரோட்டில் மதியம் 14.00 மணியளவில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்த போது மதுரையில் இருந்த சிவகங்கை நோக்கி வந்த பதிவெண் இல்லாத KTM DUKE 200 கருப்பு ஆரஞ்சு கலர் கலந்த இருசக்கர மோட்டர் சைக்கிளை ஓட்டி வந்த போது வாகனத்தை சோதனை செய்த போது வாகனத்தை ஓட்டி வந்தவர் வாகனத்தை

தள்ளிவிட்டு ஓடி அங்கே பக்கத்தில் உள்ள பள்ளத்தில் கிடந்த முண்டுக்கல்லில் குதித்து விழுந்தவரை பிடித்து பார்த்த போது அவரது குதிங்கால் மற்றும் இரண்டு பாதமும் வீங்கி காணப்பட்டது.

2. வாகனத்தை ஓட்டிவந்தவரின் பெயர், விலாசத்தை விசாரித்த போது அவர் தனது பெயர்அழகு ராஜா என்ற அலெக்ஸ், த.பெ. ஜெயக்குமார், போவானூர் என்ற தெரிவித்தார். அவர் ஓட்டி வந்த பதிவெண் இல்லாத மோட்டார் சைக்கிளின் வலது பக்கவாட்டில் உள்ள இரும்பு பாகத்தில் சுமார் 2 அடி நீளமுள்ள மர கைப்பிடியுடன் கூடிய இரும்பு வாள் ஒன்று சொருகியிருந்தது. அவர் ஓட்டி வந்த மேற்படி வாகனத்தை பற்றி விசாரித்த போது கோயம்புத்தூர், காந்திபுரத்தில் ஓர் இடத்தில் ரோட்டின் ஓரமாக நிறுத்தி இருந்த வாகனத்தை திருடி அந்த வாகனத்தில் இருந்த நம்பர் பிளேட்டை எடுத்து உடைத்து சாக்கடையில் போட்டுவிட்டதாகவும் தெரிவித்தார்.

3. மேலும் கடந்த 5 மாதங்களுக்கு முன்பாக அவர் கொலை வழக்கு சம்பந்தமாக சிறை சென்று வந்ததாகவும், தனது பாதுகாப்பிற்காக வாளை எடுத்து வந்ததாகவும் தெரிவித்தார். அந்த நபர் இவ்வழக்கின் எதிரி ஆவார். எதிரி எந்தவொரு அரசு அனுமதியின்றி மனித உயிருக்கு தீங்கு மற்றும் அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் வாளை தனது வண்டியில் வைத்திருந்த குற்றச் செயலுக்காக 14.30 மணிக்கு காரணம் கூறி கைது செய்தேன். பின்னர் தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் என்னுடன் ரோந்து பணிக்குவந்த த.கா. பாலமுரளிகிருஷ்ணன் மற்றும் காவலர் நாகராஜன் முன்னிலையில் அத்தாட்சியில் வாளையும், அவர் வந்த பதிவெண் இல்லாத KTM DUKE 200 கருப்பு ஆரஞ்சு கலர் கலந்த இருசக்கர மோட்டர் சைக்கிளின் இன்ஜின் எண்.790611566 மற்றும் Chasis No.MD2JUCYH5HC006157 கொண்டுவுள்ளவற்றை அத்தாட்சியில் நான் கைப்பற்றினேன். அந்த **அத்தாட்சி அ.த.சா.ஆ. 1** ஆகும். நான் அத்தாட்சியில் கைப்பற்றிய சுமார் 56 செ.மீ அளவுள்ள இரும்பு வாள் **அ.தா.பொ.சா.1** ஆகும்.

4. நான் கைப்பற்றிய பதிவெண் இல்லாத KTM DUKE 200 கருப்பு ஆரஞ்சு கலர் கலந்த இருசக்கர மோட்டர் சைக்கிளின் இன்ஜின் எண்.790611566 மற்றும் Chasis No.MD2JUCYH5HC006157 வாகனத்தின் **புகைப்படம் மற்றும் குறுந்தகடு அ.த.சா. ஆ 2** ஆகும். பின்பு எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரி மீது நிலைய குற்ற எண் 59/2022 சட்டப்பிரிவு 25(1-A) Arms Act-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ 3** ஆகும்.

5. எதிரியை நிலையத்தில் திரேக பரிசோதனை செய்து நிலைய பாராவிடம் ஒப்படைத்தும், எதிரிக்கு குதிங்கால்கள் இரண்டும் மற்றும் பாதங்களும் வீங்கியிருந்ததால் அவரை மருத்துவ சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தேன். அன்றைய தினம் 17.00 மணிக்கு இவ்வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் வாசுதேவன், சரவணன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைப்படம் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.த.சா.ஆ 4 மற்றும் மாதிரிவரைப்படம் அ.த.சா.ஆ 5** ஆகும்.

6. பின்னர் சாட்சிகள் வாசுதேவன், சரவணன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் நிலையம் வந்து சாட்சிகள் சார்பு ஆய்வாளர் முருகேசன், த.கா. பாலமுரளி கிருஷ்ணன் மற்றும் காவலர் நாகராஜன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் எதிரிக்கு மருத்துவ சிகிச்சை முடிந்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். வழக்கில் கைப்பற்றப்பட்ட சான்று பொருட்களையும் படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **படிவம் 91 அ.த.சா.ஆ.6** ஆகும்.இத்துடன் நான் பணியிடம் மாறுதல் காரணமாக சென்றதால் வழக்கு கோப்பை எனக்கு பின்னால் வந்த ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடம் சிவகங்கை - மதுரை மெயின் ரோடு என்றால் சரிதான். மேற்படி சாலையில் ஓரளவு வாகனங்கள் மற்றும் இருசக்கர வாகனங்கள் அதிகம் சென்று வரும் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் ஓர் ஆலமரம் உள்ளது அது பில்லூர் பஸ் ஸ்டாப் என்றால் சரிதான். அதிலும் அப்ப அப்போ ஆள் இருப்பார்கள் என்றால் சரிதான் ஆனால் அந்த சமயத்தில் ஆள் இல்லை. அந்த ஆலமரத்திற்கு பின் ஒரு மில் உள்ளது என்றால் சரிதான். சம்பவ சாட்சிகளாக தனிப்பட்ட சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான் அப்போது அங்கு யாரும் இல்லை. மேற்படி KTM வாகனத்தின் பதிவெண் உள்ளதா என்பதை சாட்சிகள் மூலமம் ஆவணங்கள் மூலமும் தெரிந்த கொள்ளவில்லை என்றால் சரிதான், ஆனால் அது திருட்டு வண்டி. மேற்படி வண்டி திருட்டு வண்டி தான் என்பதற்கு எந்தவொரு காவல் நிலையத்திலும் ஏதேனும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதா என்று நான் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் ஆனால் விசாரணையில் தெரிந்து கொள்ளவில்லை.

2. கோயம்புத்தூர் பீளமேடு காவல் நிலையத்தில் மேற்படி வண்டி திருடு போனது சம்பந்தமாக வழக்கு பதிவு செய்துள்ளதாக தெரிந்து கொண்டேன். ஆனால் மேற்படி சங்கதிகள் சம்பந்தமாக எந்தவொரு நபரிடமும் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும், அது சம்பந்தமாக எந்தவொரு ஆவணமும் நான் விசாரணை மேற்கொண்ட வரையில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் விசாரணை செய்த வரையில் வாகனத்தின் உரிமையாளர் யார் என்பதற்கான எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாகனம் கேட்பாறற்று சிவகங்கையில் கிடந்ததை எடுத்து எதிரி மீது பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கைப்பற்றியதாக கூறும் வாகனத்தில் தான் அ.த.பொ.சா.1 இரும்பு வாள் இருந்ததா என்றால் நான் கைப்பற்றிய வாகனத்தில்தான் இருந்தது.

3. நான் அந்த வாகனத்தை எதிரியிடம் இருந்து கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை நான் பதிவு செய்தேன் என்றால் சரிதான். பிரிவு 25(1A) Arms Act ன் படி எதிரி மீது தவறாக வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி அத்தாட்சி மகஜரிலும் கையெப்பமிட்ட சாட்சிகளும் தனிப்பட்ட சாட்சிகள் என்றாலும் அதில் கையொப்பமிட்ட சாட்சிகள் எனக்கு கீழ் பணிபுரியும் சார்பு ஆய்வாளர் மற்றும் காவலர் என்றால் சரிதான், ஆனால் தனிப்பட்ட சாட்சிகள் யாரும் அங்கு இல்லை. எதிரி மீது ஏதாவது பொய் வழக்கு பதிவு செய்யவேண்டும் என்ற காரணத்திற்காக பொய் வழக்கு பதிவு செய்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கானது புள்ளிவிபர கணக்கிற்காக பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் இந்த எதிரிக்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.02.23 10:50:25

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர்,**

**சிவகங்கை.**